62

004646

சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் 2018–19 – மாற்றுத் திறனாளிகளின் நலன், வேலை வாய்ப்பு மற்றும் குறைதீர்க்கும் பணிகள் – தகவல்கள் மற்றும் வளங்களை பரிமாற்றம் செய்ய வலைதளம் நிறுவுதல் – முதலாமாண்டு (2018–2019) ஒப்பளிப்பு தொகை ரூ.16,29,000/– நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மாதிந–3.1)த் துறை

**அரசாணை (நிலை) எண்.29**

நாள்: 30.07.2018
**விளம்பி, ஆடி 14,**
திருவள்ளுவர் ஆண்டு, 2049

படிக்கப்பட்டது:

1. உறுப்பினர், செயலர், மாநில திட்டக் குழு, சென்னை, கடித எண்.4000/SPC(PC)/2017, நாள் 12.02.2018.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.1992/ உ.உ. பிரிவு/2018, நாள் 27.03.2018.

---

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தின் மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் 2018–2019 (Round 1)–ல் ஏனையவற்றுனுள் கீழ்க்காணும் திட்டத்திற்கு பரிந்துரை செய்துள்ளார்.

| வ. எண் | திட்டத்தின் விவரம் | திட்ட செலவினம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1.ம் ஆண்டு | 2.ம் ஆண்டு | 3.ம் ஆண்டு | மொத்தம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை நெறிமுறைப்–படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் குறைகளைத் தீர்ப்பதற்கான ஒரு முழுமையான இணையதளம் உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் | 16.29 | 8.69 | 0.00 | 24.98 |

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கருத்துருவில் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் நிதி உதவி அளிக்க விரும்பும் நிறுவனங்கள் மற்றும் நலனுக்காக பணிபுரியும் நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளை இணைக்கவும், மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்புகள் வழங்க விரும்பும் நிறுவனங்களையும், வேலை வாய்ப்பு கோரும் மாற்றுத் திறனாளிகளையும் இணைக்கவும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தங்களின் குறைகளை நேரடியாக வலைதளம் மூலம்

பதிவு செய்து, அதன் முன்னேற்ற நிலையை தாங்களே நேரடியாக தெரிந்து கொள்ளவும் இத்திட்டம் பயன்பெறும் என்று தெரிவித்துள்ளார்.

3. எனவே, இத்திட்டத்தின் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாம் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்:-

1) புதிதாக அமைக்கப்பட்ட வலைத்தளம் சிறப்பாக செயல்படுத்த தொழில்சார்ந்த மேம்பாட்டாளர் மூலம் வடிவமைக்கப்பட்டு மாநில ஆணையர் அலுவலக கண்காணிப்பில் புதிதாக 3 நபர்களை தற்காலிக முறையில் பணியமர்த்தி இத்திட்டத்தினை செயல்படுத்தலாம். குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தை தேர்வு செய்து அதன் மூலம் கணினி ஒருங்கிணைப்பு, பராமரிப்பு, பணியமர்த்தல் ஆகியவைகளை மேற்கொள்ளலாம்.
2) செலவினங்கள் அந்நிறுவனத்தின் செயல்திறன் மதிப்பீடுகள் அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.
3) எந்த நிறுவனமாயினும் எல்காட் நிறுவனத்தின் கண்காணிப்பில் சர்வர் (server) அமைந்திருக்கும்.
4) இந்த திட்டத்தின் வெற்றிக்கு விளம்பரம் முக்கியம் என்பதால் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்டங்களில் உள்ள தொண்டு நிறுவனங்கள், மாற்றுத் திறனாளிகள் நல அமைப்புகள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள், வேலைவாய்ப்பு தருவதற்கு விரும்புகிறவர்கள் மற்றும் உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கு இத்திட்டத்தினை தெரியப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
5) இத்திட்டம் சிறப்பாக சென்றடைய முகநூல் வழியாகவும் விளம்பரப்படுத்தலாம்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்துவதற்கு புதிதாக வலைத்தளத்தை துவக்கி, நிலையான மாற்றம் ஏற்படுத்திட இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் மாநில ஆணையரகம் கண்காணிப்பில் இருந்து செயல்படவும் பின்பு குறைதீர்க்கும் பிரிவு தவிர மற்ற இரண்டு வலைப்பிரிவுகளையும் தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்பட ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். எனவே இரண்டு ஆண்டுகளுக்கு மட்டும் இத்திட்டத்திற்கு கீழ்க்கண்டவாறு உத்தேச நிதி ஒதுக்கீடு தேவை என்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

<u>திட்ட செலவின விபரம்</u>

| திட்டம் | செலவினம் | மொத்தம் | தொடர் செலவினம் / தொடரா செலவினம் |
|---|---|---|---|
| மென்பொருள் வடிவமைத்தல் | 4,00,000/- | 4,00,000/- | தொடரா செலவினம் |
| ஹார்டுவேர் (சர்வர் தவிர) (Hardware) (excluding server) | 1,20,000/- | 1,20,000/- | தொடரா செலவினம் |
| சர்வர் (Server) செலவினம் | 10,000/- (per year) | 20,000/- | தொடர் செலவினம் |
| மென்பொருள் மற்றும் ஹார்டுவேர் பராமரிப்பு செலவினம் | 10,000/- (2nd year) | 10,000/- | தொடர் செலவினம் |
| 3 பணியாளர்களின் ஊதியம் (3*20,000*12) + GST | 8,49,000/- (per year) | 16,98,000/- | தொடர் செலவினம் |

| | | | |
|---|---|---|---|
| விளம்பர செலவினம் | 2,00,000/- | 2,00,000/- | தொடரா செலவினம் |
| சில்லறை செலவினம் | 50,000/- | 50,000/- | தொடரா செலவினம் |
| மொத்தம் | | **24,98,000/-** | |

5. மேலும், இத்திட்டத்தின் பணிகளை மேற்கொள்ளுவதற்கு தொகுப்பூதிய அடிப்படையில் தொழில்நுட்ப முறையில் மூன்று தற்காலிக பணியாளர்கள் மாநில ஆணையர் அவர்களால் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும், மேலும் இத்திட்டத்திற்கு புதிய கணக்குத் தலைப்பின் கீழ் **ரூ.24,98,000/-** நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்று மாற்றுத்திறனாளிகள் நலன், வேலை வாய்ப்பு மற்றும் குறைதீர்க்கும் பணிகள் தொடர்பான தகவல்கள் மற்றும் வளங்களை பரிமாற்றம் செய்ய ஏதுவாக சிறப்பு வலைதளம் நிறுவி பராமரிப்பதற்கு கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(அ) மாநில திட்டக்குழுவின் ஒப்புதளின்படி முதலாமாண்டுக்கான செலவின ஒப்பளிப்பு ரூ.16,29,000/–க்கு (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் மட்டும்) கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

| திட்டச் செலவின விவரம் | மொத்த செலவினம் | தொடர் செலவினம்/தொடரா செலவினம் | 2018–19–ஆம் ஆண்டிற்கான செலவினம் |
|---|---|---|---|
| மென்பொருள் வடிவமைத்தல் | 4,00,000/– | தொடரா செலவினம் | 4,00,000/– |
| ஹார்டுவேர் (சர்வர் தவிர) (Hardware) (excluding server) | 1,20,000/– | தொடரா செலவினம் | 1,20,000/– |
| சர்வர் (server) செலவினம் | 20,000/– (per year Rs.10,000/-) | தொடர் செலவினம் | 10,000/– |
| மென்பொருள் மற்றும் ஹார்டுவேர் பராமரிப்பு செலவினம் | 10,000/– (2nd year) | தொடர் செலவினம் | – |
| பணியாளர்களின் ஊதியம் (3*20,000*12)+GST) | 16,98,000/– (per year Rs.8,49,000/-) | தொடர் செலவினம் | 8,49,000/– |
| விளம்பர செலவினம் | 2,00,000/– | தொடரா செலவினம் | 2,00,000/– |
| சில்லரை செலவினம் | 50,000/– | தொடரா செலவினம் | 50,000/– |
| மொத்தம் | 24,98,000/– | | 16,29,000/– |

(ஆ) ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நலன் அவர்களால் மூன்று தொழில்நுட்ப பணியாளர்கள் வெளிமுகமை மூலம் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி நியமனம் செய்யப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

(அ) “2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – NH – மாநில புதுமை நிதியின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை நெறிமுறைப்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் குறைகளை தீர்ப்பதற்கான முழுமையான இணையதளம் உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல் – 33 – தொழில் முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 03 – சிறப்பு பணி”.
(கு.தொ.கு.2235 – 02 – 101 – NH – 3338)

(ஆ) மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினை மாநில புதுமை நிதியிலிருந்து திரும்ப பெற ஏதுவாக அச்செலவினத்தை கோரிக்கை எண்.52 துறை குறியீடு 02–இல் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் சரிகட்ட வேண்டும்:-

“2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 – சமூக நலன் – 902 – கழிக்கவும் – தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – மாநிலச் செலவினங்கள் – JA – கழிக்கவும் – மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை – 30 – கணக்குகளிடையே மாற்றம்”.
(கு.தொ.கு.2235 – 02 – 902 – JA – 3007)

(இ) மேலும் கீழ்க்கண்ட பொது கணக்குத் தலைப்பின் கீழ் எதிர் வரவு வைக்கப்பட வேண்டும்:-
“J – சேமநிதிகள் (&) வட்டி பெறாத சேமநிதிகள் 8229 00 – வளர்ச்சி நல நிதிகள் – 200 ஏனைய வளர்ச்சி நல நிதிகள் – BE – மாநில புதுமை நிதி”.
(கு.தொ.கு.8229 – 00 – 200 – BE – 0006)

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நலன் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அ.சா.எண். 36487/நிதி (சந)/2018, நாள் 24.07.2018–ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.விஜயராஜ் குமார்,
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நலன், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமை கணக்காயர் (இருப்பு), சென்னை–9.
தலைமை கணக்காயர், சென்னை–18.

நகல்

தனிச் செயலர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
கூடுதல் தலைமை செயலரின் தனிச்செயலர், நிதித்துறை, சென்னை–9.
நிதி (சந/வ.செ.பொது–II)த் துறை, சென்னை–9.
இ.கோ./உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்

30/7/18